




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.1.2025) தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக, கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை சார்பில் சேலம் மாவட்டம், தலைவாசல் கூட்ரோடு பகுதியில் 1102.25 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.564.44 கோடி செலவில், நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள கால்நடை மற்றும் விலங்கின அறிவியலுக்கான ஒருங்கிணைந்த உயர் ஆராய்ச்சி நிலையத்தையும், அதில் அமைக்கப்பட்டுள்ள நிர்வாகக் கட்டடம், நுழைவு வாயில் வளைவுகள், விருந்தினர் விடுதி மற்றும் 9 வளாகங்களையும், அதனைச் சார்ந்த 126 கட்டடங்களையும் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், மீன்வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர். இராதாகிருஷ்ணன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரதா சாகு. தலைவாசல் – கால்நடை மற்றும் விலங்கின அறிவியலுக்கான ஒருங்கிணைந்த உயர் ஆராய்ச்சி நிலைய இயக்குநர் க.கிருஷ்ணகுமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## போக்சோ வழக்கில் பா.ஜ.க. மாநில நிர்வாகி கைது!

மதுரை, ஜன. 14–

பா.ஜ.க.வின் மாநில பொருளாதார பிரிவு தலைவராக பதவி வகித்து வந்தவர் எம்.எஸ். ஷா. இவர் மதுரை திருமங்கலம் பகுதியில் தனியார் கல்லூரியில் தலைவராக இருந்து வருகிறார். கடந்த ஆண்டு மார்ச் மாதம் 15 வயது மதிக்கத்தக்க பள்ளி மாணவி ஒருவர் எம்.எஸ்.ஷா மீது பாலியல் புகார் தெரிவித்திருந்தார். இதுகுறித்து சிறுமியின் தந்தை மதுரை தெற்கு அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் ஒன்றைக் கொடுத்திருந்தார்.

அதில் 'தன்னுடைய மகளின் செல்போனுக்கு பா.ஜ.க. நிர்வாகி எம்.எஸ்.ஷா ஆபாசமான உரையாடல்களை அனுப்பி வைத்துள்ளார். அதோடு என் மகளுக்கும் பாலியல் தொல்லை கொடுத்துள்ளார். இதற்கு முழுமையாக தனது மனைவியும் உடந்தையாக இருந்திருக்கிறார்' என்று தெரிவித்திருந்தார்.

இந்த புகார் அடிப்படையில் பா.ஜ.க. நிர்வாகி மீதும், அந்த மாணவியின் தாய் மீதும் போக்சோ சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கு ஐகோர்ட்டு மதுரை கிளையில் கடந்த பல மாதங்கள் நடைபெற்று வந்தது.

இந்நிலையில், இந்த வழக்கில் ஐகோர்ட்டின் உத்தரவுப்படி பா.ஜ.க. நிர்வாகி எம்.எஸ். ஷா கைது செய்யப்பட்டுள்ளார். இதனைத்தொடர்ந்து போலீசார் அவரிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

### ஈரோடு சட்டப்பேரவைத் தேர்தலில் தி.மு.க. வேட்பாளரை ஆதரித்து

# வெற்றி வாகை சூடி, ஒன்றிய பி.ஜே.பி. அரசுக்கு எச்சரிக்கைக் குரலாக ஒலிப்போம்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



சென்னை, ஜன. 14-

ஈரோட்டில் நடைபெற விருக்கும் சட்டப்பேரவை இடைத்தேர்தலில் தி.மு.க. வேட்பாளரை ஆதரித்து, ஒன்றிய பி.ஜே.பி. அரசுக்கு எச்சரிக்கைக் குரலாக அமைய பாடுபடுவோம் என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

ஈரோட்டில் நமது கொள்கைச் செல்வம் ஈ.வெ.கி.ச.இளங்கோவனின் ஈடுசெய்ய இயலாத இழப்பின் காரணமாக ஏற்பட்ட சட்டப்பேரவைத் தொகுதி காலியிடத்தை நிரப்ப, இடைத்தேர்தல் வரும் பிப்ரவரி 5 ஆம் தேதி நடைபெறும் என்று இந்தியத் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இன்னும் 10, 12 மாதங்களேதான் அந்தப் பதவியின் காலம் என்றாலும், இடைத்தேர்தல் அறிவிப்பை ஏற்று, அத்தொகுதி, தி.மு.க.வின் அன்பான வேண்டுகோளை ஏற்று, காங்கிரஸ், தி.மு.க.வுக்கு விட்டுக் கொடுத்ததன்மூலம், தமிழ்நாட்டில், 'திராவிட மாடல்' ஆட்சி நாயகரின், தி.மு.க.வின் தலைமையில் உள்ள கூட்டணி கொள்கைக் கூட்டணிதான், வெறும் பதவிக் கூட்டணி அல்ல என்று பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

**காங்கிரஸ் பெருந்தன்மை!**

காங்கிரஸ் கட்சித் தலைமையின் பெருந்தன்மையையும், கொள்கைப் பார்வையையும் சிறப்பாக வெளிப்படுத்துகின்ற ஓர் இசைவு என்பதற்காக அதனைப் பாராட்டுகிறோம்.

இடைத்தேர்தல் என்பது நடைபெறும் ஆட்சியின் சாதனைகளுக்கான ஓர் உரைகல் ஆகும்! அந்த வகையில் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமும் சாதனைக்கு மேல் சாதனைகளை நமது முதலமைச்சர் தலைமையிலான தி.மு.க. அரசு நிகழ்த்தி, உலகம் தழுவிய பாராட்டினைப் பெற்று, புகழ் மகுடம் சூட்டிக் கொண்டுள்ளது!

பிரதமர் மோடி தலைமையிலான ஒன்றிய அரசு ஒருபுறம் தங்களுடையக் கொள்கை கூட்டுறவு கூட்டாட்சி (Cooperative Federation) என்று வாயால் உச்சரித்துக் கொண்டு, மறுபுறத்தில் உரிய நிதிகளைக்கூட பாரபட்சமின்றித் தராமல், பேரிடர் காலங்களிலும், புயல், மழை, வெள்ளம் பாதிப்பில்கூட ஓர் அணா கூடத் தராது, வெறும் ஆய்வுக் குழுக்களை, சடங்காச்சாரமாக அனுப்பி, ஓரவஞ்சனை ஆட்சி செலுத்தும் நிலையில், நிதிப் பற்றாக்குறை, நிதி நெருக்கடியிலும் மக்கள் நலத் திட்டங்களில் கல்வி, குறிப்பாகப் பெண் கல்வி, ஆல்போல் தழைத்து, அருகுபோல வேரோடி உலகத்தாரை வியப்பின் விளிம்பிற்குத் தள்ளுகிறது!

**ஆர்.எஸ்.எஸ். கொள்கை பரப்பும் ஆளுநர்!**

மாநில ஆளுநர் என்ற ஓர் ஆர்.எஸ்.எஸ். கொள்கை பரப்பு பொறுப்பாளராக தன்னைக் கருதி, ராஜ்பவனத்தைக் காவி மயமாக்கி, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுக்கு முட்டுக்கட்டை போட்டு, தினமும் ஒரு போட்டி அரசு நடத்துவதையும் தாண்டி, மரபுகளையும், அரசமைப்புச் சட்ட விதிகளையும்கூட பின்பற்றாத அநீதிக்கான ஏஜெண்டாக திட்டமிட்டு நடந்து, தி.மு.க. ஆட்சிக்குத் அன்றாடத் தொல்லைக் கருவியாக உள்ள ஒருவரையும், கடமை தவறிய, மாநில உரிமைகளை அடகு வைத்து, அப்படிப்பட்ட ஆளுநரின் ஏவுகணைகள்போல் (எடுபிடிகள் என்ற சொல்லைத் தவிர்த்து) நடந்துவரும் பல கடமை தவறும் எதிர்க்கட்சிகளும் நல்ல வண்ணம் அவ்வப்போது பதிலளித்து, கடமையாற்றுவதில் கண்ணும் கருத்துமாய் இருக்கிறார் நமது முதலமைச்சர்!

**ஈரோடு இடைத்தேர்தலில் தி.மு.க.வுக்கு ஆதரவு!**

நெருக்கடியிலும், நிதி மேலாண்மையினை (Fiscal Management) மிக அற்புதமாகச் செய்து, ஏழை, எளிய மக்கள், ஒடுக்கப்பட்ட கோடானு கோடி மக்களின் உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்க ஆட்சியைக் கடந்த 3 ஆண்டுகளுக்கு மேல் நடத்தி, நல்லவர்களின் - நடுநிலையாளர்களின், தாய்மார்களின் பாராட்டைப் பெறத் தவறவில்லை.

இதனை வெளிப்படையாக சாதித்துள்ளனர். ஈரோடு இடைத்தேர்தல்மூலம், இந்த ஆட்சிக்கு உரிய நற்சான்றிதழை மக்கள் நிச்சயம் வழங்குவர்.

தி.மு.க. வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ள சந்திரகுமார் அவர்களை, திராவிடர் கழகம் ஆதரித்து, வெற்றி பெறச் செய்ய முனைப்புடன் ஆயத்தமாகும்.

இத்தருணத்தில் ஈரோடு இடைத்தேர்தல் வெற்றி என்பது, தி.மு.க. ஆட்சிக்கு மேலும் ஊக்க மாத்திரையாக அமைவதோடு, மாநில அரசின் உரிமைக்கு எதிராக, ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடர்ந்து நடத்திடும் ஒன்றிய அரசுக்கும், மக்கள் தரும் எச்சரிக்கைக் குரலாகவும் அமையும் என்பது நிச்சயம்!

அறிவிக்கப்பட்டுள்ள வேட்பாளர் சந்திரகுமார் அவர்கள், தமிழ்நாடு சட்டப்பேரவையில் அனுபவமும் பெற்ற அரசியல் பண்பாளர்.

திராவிடர் கழகம் திண்ணைப் பிரச்சாரம், தெருப் பிரச்சாரம் எல்லாவற்றிலும் தன் பங்களிப்பை அளித்து மகிழும்!

தி.மு.க. கூட்டணியின் வெற்றி மகுடத்தில், மற்றொரு முத்தாக ஈரோட்டு வாக்காளப் பெருமக்கள் பதித்து, தங்களது நன்றி உணர்வைக் காட்டுவார்கள் என்று உறுதியாக நம்புகிறோம்!

திராவிடர் கழகம் திண்ணைப் பிரச்சாரம், தெருப் பிரச்சாரம், மேடைப் பிரச்சாரம் எல்லாவற்றிலும் தனது பங்களிப்பை அளித்து மகிழும்.

இவ்வாறு திராவிடர் கழகத்தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் நடப்பு சம்பா, தாளடி பருவ அறுவடை நெல் கொள்முதலுக்கு

# 1126 நேரடி கொள்முதல் நிலையங்கள் திறப்பு!

## 5,48.422 மெட்ரிக் டன் நெல் கொள்முதல்! அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் தகவல்!

சென்னை, ஜன. 14 -

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் நடப்பு சம்பா, தாளடி பருவ அறுவடை நெல்லை கொள்முதல் செய்வதற்காக நாளது தேதியில் 1176 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப் பட்டு 5,48,422 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. மேலும் தேவையான கூடுதல் நெல் கொள்முதல் நிலையங்கள் திறந்திட மாவட்ட ஆட்சியர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

அதன் விவரம் வருமாறு:-

தமிழ்நாட்டில் பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும், அக்டோபர் 1-ம் தேதி துவங்கும் நெல் கொள்முதல் பருவத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விவசாயிகளின் நலன் கருதி செப்டம்பர் மாதம் முதல் துவங்க கடந்த மூன்று ஆண்டுகளாக ஒன்றிய அரசிடம் அனுமதி பெற்று, செப்டம்பர் 1-ந் தேதி முதல் நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

மேலும், கே.எம்.எஸ் 2023-2024-ம் கொள்முதல் பருவத்தில் நெல் கொள்முதலை அதிகரிக்க ஏதுவாக, விவசாயி களை ஊக்குவிக்கும் விதமாக மாநில அரசால் ஏற்கனவே விவசாயி களுக்கு வழங்கப்பட்டு வந்த ஊக்கத்தொகை சன்னரகம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.75/ லிருந்து ரூ.107/ ஆகவும், பொது ரகம் ரூ. 50 லிருந்து ரூ. 82 ஆகவும் உயர்த்தி வழங்கப்பட்டது. மேலும் நடப்பு கே.எம்.எஸ் 2024-2025 ம் கொள்முதல் பருவத்திற்காக ஏற்கனவே, வழங்கி வந்த ஊக்கத்தொகை குவிண்டால் ஒன்றுக்கு முறையே சன்னரகம் ரூ. 107 லிருந்து ரூ.130 ஆகவும் பொதுரகம் ரூ.82 லிருந்து ரூ.105 ஆகவும் உயர்த்தி குறைந்தபட்ச ஆதார விலையுடன் ஒரு குவிண்டால் சன்னரகம் நெல் ரூ.2,450/-க்கும் பொதுரகம் நெல் ரூ.2405/-க்கும் விவசாயி களி டமிருந்து கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தின் கீழ் கடந்த கே.எம்.எஸ் 2021-2022 மற்றும் 2022-2023 ஆகிய பருவங்களில் சுமார் 40 இலட்சம் மெ.டன்னிற்கு கூடுதலாக நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் நடப்பு கே.எம்.எஸ் 2024--2025-ம் பருவத்தில் 01.09.2024 முதல் 09.01.2025 வரை 75,936 விவசாயிகளிடமிருந்து 5,48,422 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு, கொள்முதலுக்கான விலையாக ரூ.1,313.96 கோடி விவசாயி களின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாட்டில் சம்பா, தாளடி பருவ அறுவடைப் பணிகள் தொடங்கியுள்ளதால், நாளது தேதியில் 1176 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. நடப்பு கொள்முதல் பருவத்திற்காக 8281 பருவகாலப் பணியாளர்கள் நியமிக்க ப்பட்டு 3448 எண்ணிக்கையிலான தூற்றும் இயந்திரங்கள், 3980 எண்ணிக்கையிலான ஈரப்பத சோதனைமானிகள், தேவையான அளவு காலிசாக்குகள் கொள்முதல் நிலையங்களுக்கு அனுப்பப்பட்டு வருகிறது. நேரடி கொள்முதல் நிலையங்கள் திறப்பது மற்றும் புகார்கள் தொடர்பாக தலைமை அலுவலக உழவர் உதவி மையம் சேவை 1800 599 3540 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண் மூலம் நிவர்த்தி செய்து கொள்ளவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், விவசாயிகளின் கோரிக்கைக்கு ஏற்ப, தேவையான கூடுதல் இடங்களில், நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறந்து எவ்வித புகாருக்கும் இடமின்றி விவசாயிகளிட மிருந்து நெல் கொள்முதல் செய்திட ஏற்கனவே மாவட்ட ஆட்சியர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனவும் தெரிவி த்துக் கொள்ள ப்படுகிறது.

இவ்வாறு அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் தெரிவித்தார்.



பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் தமிழ்ப் புத்தாண்டு தமிழர் திருநாள்பொங்கல் திருநாளை முன்னிட்டு சமத்துவ பொங்கல் வைக்கும் நிகழ்வு பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வகாப் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் மாநகராட்சி மேயர் ராமகிருஷ்ணன்,துணை மேயர் ராஜ்,மாவட்ட அவைத்தலைவர் முருகன்,மண்டல தலைவர்கள் மகேஸ்வரி,பிரான்சிஸ்,கதிஜா இக்லாம் பாசிலா,ரேவதி,பகுதி செயலாளர் துபாய் சாகுல், மாமன்ற உறுப்பினர்கள் சுதா மூர்த்தி,ஜெகநாதன்,அல்லா பிச்சை, பேச்சியம்மாள், மன்சூர், மாரியப்பன்,சுப்பிரமணியன், ராஜேஸ்வரி,சகாய ஜ்லியட் மேரி,ராஜேஸ்வரி,சபி அமீர்பாத் கந்தன்,நித்திய பாலையா, சின்னத்தாய் கிருஷ்ணன், சுப்புலட்சுமி,இந்திரா,வட்டச் செயலாளர்கள் பேபி கோபால், ராஜா,அருண்,பால மகேஷ், உஸ்மான்,மாரிமுத்து,ஜெயின் உசேன்,ஆவின் கல்யாணி, பத்மராஜ்,செய்யது மைதீன், ஒன்றிய செயலாளர் அன்பழகன் வழக்கறிஞர்கள் தினேஷ் கந்தசாமி,கருணாநிதி,பால் மாயாண்டி, மகாராஜன்,தகவல் தொழில் நுட்ப அணி காசிமணி, பொறியாளர் அணி சாய்பாபா உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

# ஞாலமெலாம் பொங்கலிடும் நாள்வரப் பொங்குவோம்!

திங்கள் தை முதல்நாளில்
திகழ்ந்திடும் பெரும்பொங்கல்
வங்கத்துக் கடல்அலையாய்
வளருமே பெருமகிழ்ச்சி!
செங்கதிர் போற்றியே
திக்கெட்டும் தமிழரில்லம்
எங்கணும் பொங்குமே;
எழுச்சிதான் தங்குமே!
கங்குலும் போகுமே;
கதிரொளி மேவுமே!

குங்கும நிறப்பானை
குளிர்நீரைக் கொதிக்கவிட்டுச்
செங்கழனிச் செந்நெல்லில்
தீட்டிய புத்தரிசி
சங்குநிறப் பால்வளர்த்துத்
தளதளக்க மணமணக்கப்
பொங்குகிற பொங்கலைப்
புதியதொரு வெண்ணமுதைத்
தங்கவாழை மாபலா
தழைக்கரும்பு மஞ்சளுடன்
பொங்கொளிச் சூரியனே
பொலிகவெனப் போற்றுவோம்!

பொங்கல்ஓர் உண்மையைப்
புகட்டுதல் காணலாம்!
சங்கிலியாய் எத்தனை
தடைகள்தாம் பிணித்தாலும்
வெங்கனலில் எரித்தவற்றை
வெண்சாம்பல் ஆக்குகென்றும்
மங்குதல் காணாத
மனவெழுச்சி கொள்கவென்றும்
தங்குதல் இல்லாமல்
தழைத்தெழுதல் வேண்டுமென்றும்
தொங்குதல் செய்யாமல்
துலங்குக மானமென்றும்
தெங்கிள நீர்போலத்
தெளவறிவு வளர்கவென்றும்
பங்கிட்டு வழங்குகென்றும்
பகருதல் பொங்கலன்றோ!

இன்றுள்ள நிலைமைகட்கு
எப்படித்தான் பொங்குவது?
ஒன்றியம் பறிக்கின்ற
உரிமைக்குப் பொங்குவதா?
குன்றளவு பறித்தபின்
குவடாகக் குவித்தபின்
குன்றிமணி அளவிற்கே
கொடுப்பதெண்ணிப் பொங்குவதா?

அன்றாடம் மீனவர்கள்
அறங்கெட்ட இலங்கையிடம்
துன்புற்றுத் துடிப்பதற்குச்
சொரணையே இல்லாமல்
ஒன்றுமே செய்யாமல்
உடனடியாய் உதவாமல்
ஒன்றேநாடு ஓர்ஆட்சி
என்கின்ற வஞ்சகரின்
ஏய்ப்பெண்ணிப் பொங்குவதா?

நன்குபயில் மாணவர்கள்
நல்லறிவை நசுக்குகின்ற
கொன்றன்ன நீட்தேர்வால்
குலைவதற்குப் பொங்குவதா?
வென்றாலும் ஏற்காமல்
விளையாடும் தில்லிகள்
கன்றிய செயல்களால்
கனலாகப்பொங்குவதா?

ஒன்றுரைத்து ஒன்றுசெயும்
ஓந்திகளைப் பொங்குவதா?
இன்றிங்கே ஆளுநரின்
இழிவெண்ணிப் பொங்குவதா?
மென்பசுத்தோல போர்த்தியே
வேடமிடும் வேங்கையைக்
கொன்றகற்ற முடியாமல்
குமுறித்தான் பொங்குவதா?

தென்றலெழும் திசையிலே
தேனலைசூழ் நாட்டிலே
தொன்றுவளர் தமிழ்க்கெதிராய்த்
துண்டுமொழி இந்தியை
மன்றேற்றும் திணிப்பெண்ணி
மனங்கொதித்துப் பொங்குவதா?

கன்னியர் சிறுமியர்
கவின்கெடுக்கும் காமவெறி
வன்புணர்ச்சிக் கொடியோரை
வதைத்திங்குப் பொங்குவதே
நன்னெறி ஆகுமாம்;
நஞ்செனச் சாகுமாம்!

நின்றெதிர்த்தார் ; அறியாமை
நீடுதுயில் நீக்கினார்
தன்மானம் பகுத்தறிவு
தந்த ஒரு பெரியாரைச்
சன்மானக் கூலிக்குச்
சாடுகிற காலிகள்
கன்னமிடல் காண்கையில்
கழுவேற்றல் பொங்கலாம்!

ஒன்றுலகம் உறவெவரும்
ஒழுகிய தமிழ்நாட்டில்
இன்றுபல சாதிகள்
ஏமாற்றும் சமயங்கள்
தின்றுகொழுத்து அலைகின்ற
தினவெடுத்த கும்பல்கள்
ஒன்றுபல ஆக்கியே
உருக்குலைக்கும் சண்டைகள்
சென்றொழியப் பொங்குவோம்
செம்பானை வழியவே!

அன்றுரைத்தார் பேரறிஞர்
அண்ணாவும் தமிழருக்கு
ஒன்றியம் எப்போதும்
ஓரவஞ்சம் செய்யுமென!
பின்வந்த கலைஞரும்
பேடிமையை உணர்ந்ததனால்
தன்னாட்சி வேண்டுமெனச்
சாற்றினார்; தளபதியார்
நின்றாட்சி செய்கின்ற
நீர்மையைப் பொறுக்காத
பன்றிவேலை யாளர்கள்
படுதோல்வி கண்டிட
வென்றிவேல் உயர்த்தியே
வீரத்தைப் பொங்குவோம்!

பேராசிரியர்
**மா.செல்வராசன்**

உலகெலாம் இருளோட்டி
உலாவரும் ஒளிக்கோளே!
நிலவுக்கும் தண்மைதந்து
நீளிருள் அழிப்போனே!
இலகொளிச் சூரியனே!
இன்தமிழர்க்கு உரியவனே!
பலகாலம் பொங்கலிட்டுப்
படைத்துன்னைப் போற்றுகின்றோம்;
அலகிலா உன்ஒளியால்
அண்டமெலாம் உயிர்க்கிறது;
நிலமெலாம் பசுமையே
நீங்காமல் செழிக்கிறது;
கலகந்தான் செய்தாலும்
கார்முகில் பொழிகிறது;
நிலவிடும் விண்மீன்கள்
நின்ஒளிமுன் மண்மீன்கள்!
குலவையிட்டு வாழ்த்துவோம்
கொண்டாடி வணங்குவோம்!

நாள்தோறும் ஒளிர்கின்ற
ஞாயிற்றுக்கு ஒருபொங்கல்!
நீள்உழைப்பால் உலகூட்டும்
நேர்உழவர்க்கு ஒருபொங்கல்!
வேளாண்மைக்கு உதவுகிற
மாடுகளுக்கு ஒருபொங்கல்!
நூலாண்மை வள்ளுவரின்
நுட்பத்திற்கு ஒருபொங்கல்!
மேலாண்மைப் புத்தாண்டு
மேவுதற்கு ஒருபொங்கல்!
சாலாண்மைச் சான்றோரின்
தகைமைக்கு ஒருபொங்கல்!
கோலவிழிப் பாவையர்கள்
கூடிநின்று பாடிஆடிக்
கோலாட்டம் கும்மியெனக்
கொண்டாட ஒருபொங்கல்!
நீலவான் உதயத்து
நிமிர்ந்தெழும் சூரியன்
சாலவே வாழ்த்திடும்
தளபதிக்கு ஒருபொங்கல்!
காலமெலாம் வாழ்வின்பம்
காணுதற்கு ஒருபொங்கல்!
ஞாலமெலாம் பொங்கலிடும்
நாள்வர ஒருபொங்கல்!



தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் தமிழ் புத்தாண்டு – தமிழர் திருநாள் பொங்கல் திருநாளை முன்னிட்டு 100 பொங்கல் பானைகளுடன் சமத்துவப் பொங்கல் வைக்கும் நிகழ்வு தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ.தலைமையில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தங்கவேலு, சீனிவாசன்,மாநில மருத்துவர் அணி துணைச்செயலாளர் செண்பக விநாயகம், மாவட்டப் பொருளாளர் சரவணன்,துணை செயலாளர்கள் ராஜதுரை, புனிதா,மனோகரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் லாலா சங்கரபாண்டியன், கடற்கரை,பூசைப் பாண்டியன், பொன்முத்தையா பாண்டியன், பெரியதுரை,வெள்ளத்துரை, ராமச்சந்திரன்,சேர்மத்துரை, பால்ராஜ்,குணசேகரன், மாரிச்சாமி,தேவா, வேலுச்சாமி பாண்டியன்,சாகுல் ஹமீது,பிரகாஷ், அந்தோணிசாமி. ரூபி மனோகரன், குருசாமி,மாரிமுத்து,சேது சுப்பிரமணியன் மற்றும் அனைத்து அணி அமைப்பாளர்கள்,நிர்வாகிகள்,ஒன்றிய,நகர, பேரூர் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள்,கழக மூத்த முன்னோடிகள் உள்பட கழகத்தினர் திரளாக கலந்து கொண்டனர்.